பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 03 சனிக்கிழமை (16-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 50

## சமாதானத் திட்டத்துடன் புறப்பட்டு வந்த
# கிட்டுவை சர்வதேச கடலில் வைத்து
# இந்தியப்படை பிடித்துச் சென்றது!

## சென்னைக்கு கூட்டிச் செல்லப்பட்டார்

லண்டன், ஜனவரி 16

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டுவை) சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படை பிடித்தது. சென்னையை நோக்கி அவர் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றுடன் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்திப்பதற்காக தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்தபோதே இந்தியக் கடற்படை அவரை வழிமறித்துப் பிடித்துச் சென்றது.

இந்தியக் கரையில் இருந்து தென்கிழக்கு முகமாக வங்கக் கடலில் 450 மைல் தூரத்தில் வைத்து. கிட்டு வந்த கப்பலை இந்தியப் படையினர் வழிமறித்ததாகக் கூறப்படுகிறது.

இலங்கைக் கரையிலிருந்து கிழக்குப்புறமாக 290 மைல் தூரத்தில் கடந்த புதன் இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஐரோப்பாவில் இருந்து தென்காசிய நாடு ஒன்றின் தலைநகருக்கு விமானம் மூலம் திரு. கிட்டு முதலில் வந்தார் என்றும் —

பின்பு அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி கப்பலில் அவர் பயணம் செய்தார் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது

## தம் கப்பலைத் தகர்க்கப் போவதாக இந்தியப் படையை எச்சரித்தார் கிட்டு

தமது கப்பலை இந்தியக் கடற்படைக் கப்பல் வழிமறித்ததும்—

கடற்படையினர் தாம் இருக்கும் கப்பலில் ஏறினால் தமது கப்பலைத் தன்னுடன் சேர்த்துத் தகர்த்து விடப் போவதாக திரு. கிட்டு எச்சரித்தார் என்றும்—

இதனைத் தொடர்ந்து எதுவுமே செய்ய முடியாத ஒரு நிலை அங்கு உருவானதாகவும் செய்தி ஏஜன்ஸி ஒன்று குறிப்பிட்டது.

பின்னர் எவ்வாறு இந்தியக் கடற்படையினரால் திரு கிட்டுவை சென்னைக்கு அழைத்துச் செல்ல முடிந்தது என்பது குறித்து எதுவித செய்திகளும் வெளியாகவில்லை. [உ-3]

## ஐரோப்பிய நாட்டில் பேச்சு நடத்தும் திட்டத்தையே கிட்டு கொண்டுவந்தார்

லண்டன், ஜன. 16

ஐரோப்பிய நாடு ஒன்றில் ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்துவதற்கான யோசனை அடங்கிய திட்டம் ஒன்றை திரு. கிட்டு தம்முடன் கொண்டு சென்றார். அவ்வேளையிலேயே அவர் இந்தியப் படையினரால் வழிமறிக்கப்பட்டார்.

இத்தகவலை பாரிஸில் இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரான திரு. லோறன்ஸ் திலகர் வெளியிட்டார்.

திரு. கிட்டு வழிமறிக்கப்பட்டது தொடர்பாக பி.பி.ஸி தமிழ்ச்சேவைக்கு அளித்த பேட்டியிலேயே திரு. திலகர் இத்தகவலை வெளியிட்டார். அப்பேட்டியில் அவர் குறிப்பிட்டதாவது:-

சுமார் 450 மைல்களுக்கு அப்பால் இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதால், நிச்சயமாக இது சர்வதேச கடற்பிராந்தியத்தில்தான் இடம் பெற்றிருக்கிறது என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது.

கேள்வி: திரு. கிட்டுவை விடுவித்து இலங்கைக்குக் கொண்டு செல்ல நீங்கள் ஏதாவது முயற்சி செய்கிறீர்களா? அதுபற்றி ஏதும் சொல்ல முடியுமா?

பதில்: நாங்கள் இது சம்பந்தமாக சர்வதேசஅளவில்— சர்வதேச சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருப்பவர்களை — அணுகிக்கொண்டிருக்கிறோம். அதேவேளையில் சர்வதேச நிறுவனங்களையும். மனித உரிமை நிறுவனங்க

[5 ஆம் பக்கம் பார்க்க]

## தற்செயல் சம்பவமாக இருக்கலாம்!

லண்டன், ஜன. 16

திரு. கிட்டுவை இந்தியக் கடற்படை வழிமறித்த சம்பவம் ஒரு தற்செயல் நிகழ்வாக — விபத்தாக — இருக்கலாம்.

— இவ்வாறு தாம் கருதுவதாக விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்தார்.

அவர் இவ்வாறு பி. பி. ஸி. ஆங்கில சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். அப்பேட்டியின் விவரம் வருமாறு :-

கேள்வி:- திரு. கிட்டு சமாதானத் திட்டத்தைக் கொண்டு சென்றார் என்றால், இந்தியர்கள் ஏன் அவரை வழிமறித்தார்கள்? சமாதான முயற்சிகளைக் குழப்பவா?

திலகர் :- சமாதானத் திட்டத்தைக் குழப்ப வேண்டிய தேவை இந்தியர்களுக்கு இருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் சமாதான முயற்சிகளில் இந்தியாவும் சம்பந்தப்படவேண்டியிருந்தது. இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் எந்த சமாதானத் திட்டமும் வெற்றி அளிக்காது என்பது எமக்குத் தெரியும்.

ஆகவே இது தற்செயலாக — விபத்தாக — ஏற்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அறிக்கை இன்று வெளிவரும்?

லண்டன், ஜன. 16

திரு. கிட்டு இந்தியக் கடற்படையால் வழிமறிக்கப்பட்டு சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டது குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது

செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

திரு. கிட்டு வழிமறிக்கப்பட்டமை ஒரு தற்செயல் சம்பவமாக இருக்கலாம் என்று விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டது குறித்து பி. பி. ஸியின் இந்தியச் செய்தியாளர் ஒருவரிடம் கேட்கப்பட்டபோது—

அது தற்செயல் சம்பவமாக இரு[illegible] திரு. கிட்டு [illegible] பய[illegible] அவர்கள் உடனே அனுமதித்திருப்பார்கள் என்று அச்செய்தியாளர் பதிலளித்தார்.

''இந்தியக் கடற்படை இந்தியக் கரையோரத்தில் தனது [illegible] தீவிரப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## இரு கப்பல்கள் வழிமறித்தன

திரு. கிட்டு பயணம் செய்த கப்பலை இந்தியக் கடற்படையின் இரு கப்பல்கள் வழிமறித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

நீண்ட காலதாமதத்தின் பின் திரு கிட்டு சென்னைக்கு கூட்டிச் செல்லப்பட்டதாகவும் இந்தியக் கரையிலிருந்து நீண்ட தூரத்துக்கு அப்பால் இச்சம்பவம் நடைபெற்றதாலேயே திரு கிட்டுவை சென்னைக்குக் கூட்டிச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சமாதான முயற்சிகளை இந்தியா குழப்புகிறது
### நெடுமாறன் குற்றச்சாட்டு

லண்டன், ஜன. 16

திரு. கிட்டு அவர்களை வழிமறித்ததன் மூலம் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடைபெறும் — சர்வதேச அளவிலான — முயற்சியை இந்திய அரசு தடுக்கப்பார்க்கிறது.

— இவ்வாறு தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் திரு. பா. நெடுமாறன் இந்திய அரசைக் குற்றஞ்சாட்டியுள்ளார். (உ-3)

## உயர்தரப் பரீட்சை முடிவு இன்று அல்லது நாளை?

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஜி சீ ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகள் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை அலுவலக அதிகாரிகள் மூலமாக கொழும்பில் இருந்து வாகனம் மூலம் பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் தகவல் அனுப்பியுள்ளார்.

### கிளாலித் தாக்குதல்:
## காயமடைந்த பயணிகள் அனுராதபுரம், மன்னாரில்?

யாழ்ப்பாணம், ஜன. 16

கிளாலிக் கடற்பகுதியில் கடந்த 2 ஆம் திகதி படையினர் நடத்திய கொடூரத் தாக்குதலில் காயமடைந்த சிலர் மன்னார் மற்றும் அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருவதாக நேற்று யாழ். செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது

சிகிச்சை பெறுவோர் பற்றிய விவரங்களை மன்னார் அரச அதிபர் மூலமாக பெற்று அனுப்புமாறு யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி ப திலகநாயகம் போல் கொழும்பில் உள்ள அரச அதிபருக்கு நேற்று தகவல் அனுப்பியுள்ளார்.

கிளாலித் தாக்குதலில் காயமடைந்த 12 பேர் மன்னார் ஆஸ்பத்திரியிலும்' 13 பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெறுவதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் கிளாலிக் கடலில் பயணம் செய்த சமயம் காணாமல் போனதாகக் கருதப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

### ஹமில்டன் அனுராதபுரத்தில்!
## முப்படைத் தளபதிகள் வாரத்தில் 3 தடவை சந்திப்பு

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு பணிபுரியும் முப்படைகளின் தளபதிகளும் பொலீஸ் மா அதிபரும் வாரம் மூன்று தடவைகள் அனுராதபுரத்துக்குச் சென்று கூட்டுப் படைகள் பிரதம தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவைச் சந்திப்பார்கள்.

கூட்டுப்படைகள் தலைமையகம் அனுராதபுரத்துக்கு உடனடியாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து. இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக லங்காபுவத் செய்தி அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

கூட்டுப்படைகள் தலைமையகத்தின் பிரதான நிர்வாக அதிகாரியான பிரிகேடியர் நளின் அங்கம்மனவும் அனுராதபுரத்தில் இருந்தே இனி பணிபுரிவார்

இவர் தற்போது கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளராக இருந்து வருகிறார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையலறை மேற்பார்வையாளர் சக உப விடுதிக் காப்பாளர்

சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறை வாழ்வு இல்லத்திற்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. [பெண்பாலாரிடமிருந்து]

க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறித்த பதவியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தில் தங்கியிருந்து கடமைபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் 27-01-1993ற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுக் கடிதத்தில், செயலாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கௌரவ செயலாளர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி-4254)

# யாழ். வர்த்தக சங்கம் விடுக்கும் வேண்டுகோள்

15-01-1993 அன்று எங்களுக்கும் காவல் துறையினருக்கும் நடைபெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட முடிவின்படி இவ்வறிவித்தலை வர்த்தகர்களுக்கு அறியத்தருகிறோம்.

(1) சகல நகைத்துறை வர்த்தகர்களும் அறிய வேண்டியது.:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நகைத்துறை சார்ந்த அனைத்து வர்த்தகர்களும் தமிழ் ஈழ காவல்துறைக்கு சையளிக்கும் கொள்முதல் பட்டியலை ஒவ்வொரு மாதமும் 1 ஆம் திகதியிலும் 16 ஆம் திகதியிலும் தமிழ் ஈழ காவல்துறையின் குற்றப்புலன் ஆய்வுப் பிரிவில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும் தவறாது மார்ப்பிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

குறிப்பு: விடுமுறை நாளாக இருந்தாலும் பட்டியலை ஒப்படைக்க வேண்டும் என்பதை தெரியப்படுத்துகிறோம். தவறும் பட்சத்தில் எக்காரணம் கொண்டும் எடுக்கப்படமாட்டாது.

(2) சகலதுறை வர்த்தக உரிமையாளர்களுக்கும்:

நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

1993-01-18 முதல் 1993-01-28 வரை காலை 8.30 மணியிலிருந்து 1.00 மணிவரை யாழ், நகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் தங்களது நிறுவை, அளவை உபகரணங்களை நிறுவை அளவைப் பொறுப்பதிகாரி அவர்களிடம் முத்திரையிட்டு பெற்றுக்கொள்ளவும். இவ் அறிவித்தலை நிறுவை அளவை பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க வர்த்தகர்களுக்கு அறியத் தருகிறோம்.

தலைவர்:
க. கனகசபாபதி

செயலாளர்
நா. த. அன்னலிங்கம்

(சி/4251)

# நன்றி நவிலல்

கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. ஆறுமுகம் தர்மராசா 02-01-93 கிளாலிக் கடலில் அகால மரணமானதை அறிந்து உடுசணையிழந்தவன் நைபோல் உடன்வந்து சகல உதவிகளைச் செய்தும், கல்விப் பணிமனையில் வைத்து அஞ்சலி செலுத்திய கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கும், ஏனையோருக்கும், கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கும், பூதவுடலை அன்னாரின் இல்லத்துக்கு எடுத்துவர உதவிய விடுதலைப்புலிகளுக்கும் கிளாலியிலிருந்து கொண்டு வந்து சகல ஏற்பாடுகளையும் செய்ய உதவிய அனைவருக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்திய டிறிபேர்க் கல்லூரி, வீரசிங்கம் மகா வித்தியாலயம், மகளிர் மகா வித்தியாலயம், இந்துக் கல்லூரி, அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றின் பளைக் கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் பரியோவான் கல்லூரி மாணவர்களுக்கும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தோருக்கும், ஈமக்கிரிகையில் பங்குபற்றியோருக்கும், மலர்வளையம் வைத்த அன்பர்களுக்கும், நேரிலும் கடித மூலமும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கு, செய்தியை விபரமாக பிரசுரித்த பத்திரிகையின் ஆசிரியருக்கும், இரங்கலுரை ஆற்றியவர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி விஜயலட்சுமி தர்மராசாவும், குடும்பத்தினரும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(57 9)

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 16

வேதாந்த சித்தாந்த சமரச ஞானி தாயுமானவசுவாமிகள் நினைவுரை இன்றும், நாளையும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

மெய்கண்ட தேவர் ஆதீனச் சைவ சித்தாந்த உயர் நிறுவனத்தின் சார்பில் நிகழும் இந்த இருநாள் நிகழ்ச்சியில் மூதறிஞர் க. சி. குலரத்தினம், திரு. மு. திருஞான சம்பந்த பிள்ளை முதலியோர் விரிவுரைகளை நிகழ்த்துவர். [ஒ]

o o o

தென்மராட்சி, ஜன. 16

தமிழீழ போராட்ட வரலாற்றில் ஜனவரி மாதத்தில் வீரமரணமடைந்த கொடிகாமத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான அஞ்சலிக்கூட்டம் இன்று சனிக்கிழமை புனை வேலி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (கூ-117)

## இலங்கைக்கு மேலும் உதவி

கொழும்பு ஜன 16

இலங்கைக்கு மேலும் பல கோடி டொலர் நிதி உதவியை வழங்க உலகவங்கி இணக்கம் தெரிவித்துள்ளது

இந்தக் கடனை வழங்குவதற்கு எதுவித தடையும் இருப்பதாகத் தெரியவில்லை என்று உலகவங்கியின் தெற்காசியப் பிரிவுத் தலைவர் ஜோசப் வூட் கொழும்பில் தெரிவித்தார்.

(உ-எ)

## விபத்தில் பலி

யாழ்ப்பாணம், ஜன. 16

கடந்த புதன்கிழமை ஆயுர்வேத கல்லூரிக்கண்மையில் இடம்பெற்ற லொறி விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் மறுநாள் காலை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைச் சேர்ந்த சிவபாதம் செல்வம் (வயது 33) என்பவரே மரணமானவராவார். (த-15)

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 16

நல்லூர் ஸ்ரீ கொழும்புத்துறை வைரவர் சுவாமி கோவிலின் வருடாந்த விசேட சங்காபிஷேகம் இன்று பகல் நடைபெறும். மாலை திருவிழாவில் வயலின் சோலோ கச்சேரி இடம்பெறும். (த)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 16

அமரர்கள் பத்மராஜா, சக்திபாலன் ஆகியோர் நினைவாக கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் வருடந்தோறும் நடத்தும் — அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான — கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது

முதலாவது ஆட்டத்தில் ஜொலிஸ்ராரர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஷப்ரா அணி மோதும்.

முப்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக இச்சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி, யாழ் மாவட்ட கழக அணிகளுக்கிடையில் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு;-

★ 3.30 மணி:- ஷப்ரா விக. அணி எதிர் சென் பத்றிக்ஸ் கல்லூரி அணி.

★ 4.30 மணி:- பல்கலைக் கழக அலுவலர் அணி எதிர் ஜொனிபன்ஸ் சிவப்பு அணி.

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்காக நடத்தும் கலந்துரையாடல் வகுப்புகள் நாளை தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 16

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் பங்காற்றிய சகல படப்பிரதம தேர்வாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லூரிலுள்ள தமிழீழக் கல்விக் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

விடைத்தாள்களைத் திருத்திய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மேலதிக தரவுகளைப் பெறவே இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

★ ★ ★

கோப்பாய், ஜன. 16

கோப்பாய் வடக்கு ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி கோவில் முன்றலில் விடுதலைப் புலிகளின் "போர்க்கால கதம்பம் அரங்கு" நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும். (ஒ 72)

## இன்று சேவை

கிளாலி - நல்லூர் பயணிகள் படகுச்சேவை இன்று சனிக்கிழமை வழமைபோல் நடைபெறும். (உ-17)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் II

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் II பதவிக்காக செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்திற்கு மேலதிகமாக; இப் பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் மாதமொன்றுக்கு 3500 - 10 X 100 - 4500/- ரூபா ஆகும் 3500 - ரூபா [நிலையான சம்பளம்] அல்ல

— பதிவாளர்

[சி-4253]

30 - 01 - 1993 இல் நடைபெறவுள்ள

## எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

## பொது விவேகம் - மொழித்தேர்ச்சி

(வெளியீடு: அஸ்ரன் பதிப்பகம்)

(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

(சி-1174)

## கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 17-01-93 பி.ப. 2.30 மணிக்கு, கொக்குவில் பொதுநூலக மேல்மாடியில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. மாதவகுமாரன்,
செயலாளர்.

(24084)

## பாவனையாளர்கள் நலன் கருதி கண்காணிப்பாளர்கள்

பாணின் நிறை, விலை, தரம் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை, பாவனையாளர்களின் நன்மை கருதி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இருந்து ஒருவரை நியமிக்க எமது சங்கம் விரும்புகின்றது. தன்னலமற்ற சேவையாற்ற விரும்பும் சமூக சேவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சங்கத்தின் அனுமதிப் பத்திரமும் வழங்கப்படும்.

ந. பாலவினாயகர்
செயலாளர்
யாழ். மா. பே. உ. சங்கம்

யாழ், மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
மணியம்ஸ் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(24083)

## ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தினால் பாவித்து கழிக்கப்பட்ட நோமல் லொறிக்கான உதிரிப்பாகங்கள் 28-01-93 காலை 10-00மணிக்கு மேற்படி சங்கத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். உதிரிப்பாகங்களைப் பார்வையிட விரும்புவோர் வேலை நாட்களில் காலை 10-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணிவரை சங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

சி. சச்சிதானந்தம்
பொதுமுகாமையாளர்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை 15 01 93

(சி/4150)

பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம் - பளை

## பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையோர் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து 30-01-1993 ஆம் திகதியோ, அல்லது அதற்கு முன்போ தலைவர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்

குறியீட்டு இலக்கம்: 101/7

சம்பளத்திட்ட இலக்கம்:

9 - 1105 - 60x4 - 75x11 - 2170 அத்துடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும்.

வயது:

25 45. கூட்டுறவுப் பணியாளர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் இவ் வயதெல்லை பொருந்தாது.

கல்வித் தகைமைகள்:

1. கூட்டுறவுப் பயிற்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது
2. கூட்டுறவுப் பணியாளர் [உயர் தரம்] தராதரபத்திரமும் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும் அல்லது-
3. 5 வருட அனுபவத்துடன் கூடிய முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது-
4. வருடம் இருபது லட்சம் ரூபாவை விற்பனைச் சுழற்சியாக கொண்ட வியாபார நிறுவனத்தில் மேலமுகாமை பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம்.

செ. மார்க்கண்டு,
தலைவர்.

15 01- 993.

(சி-4149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் விவகாரம்;
# டென்மார்க்கில் நெருக்கடி

## பிரதமர் பொய்யான தகவல்களை வெளியிட்டாராம்

கோப்பன்ஹெய்ன், ஜன 16 இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம் குறித்து டென்மார்க் பிரதமர் போல் ஸ்லூட்டர் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டில் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து டென்மார்க் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளை அங்கு தங்க அனுமதித்த பின்னர் — அவர்களின் குடும்பங்களை டென்மார்க்கினுள் அனுமதிப்பதில்லை என நீதி மற்றும் நீதித்துறை அமைச்சுக்கள் 6 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட முடிவு முறை கேடானது என நீதி நிர்வாக அமைச்சு நடத்திய விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததைத் தொடர்ந்தே பிரதமர் ஸ்லூட்டர், பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

12 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய சமூகத்தின் தலைமைப் பதவியை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு தான் டென்மார்க் ஏற்றது. அடுத்த ஆறு மாதங்களுக்கு இந்த தலைமைப் பதவி டென்மார்க்கிடம் இருக்கப்போகின்றது.

இந்த நிலையில் — டென்மார்க் பிரதமர் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் பொய்யான தகவல்களை வெளியிட்டுவிட்டார் என்று நீதி நிர்வாக அமைச்சின் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1987இல் — டென்மார்க்கில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுடன் சேர்ந்து கொள்ள அவர்களது உறவினர்களுக்கு டென்மார்க் அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தமை தொடர்பாகவே பிரதமர் நாடாளுமன்றத்தில் பொய் கூறினார் என்று அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை முடிவடையும் வரை தனக்குப் பதிலாக நீதி அமைச்சர் ஹெனிங் பிலமோஸ் சாபந்து பிரதமராக இருக்கலாம் என்று பதவி விலகிய பிரதமர் தெரிவித்திருக்கிறார். இந்த யோசனையை நாடாளுமன்றம் ஏற்குமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில் பிரதமர் பொய் சொன்னதால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, ஐரோப்பிய சமூகத்தின் எதிர்கால நடவடிக்கைகளை பெரிதும் பாதிக்கலாம் என்று சமூக வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டுகளாக திரு ஸ்லூட்டர் பிரதமராக இருந்து வருகிறார். (த-எ)

## கிறிஸ்தவ மறை நாற்பது தொடர் உரைகள்

19 - 01 - 1993 முதல் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் மாலை 4-00 — 6-00 வரை பரி. யோவான் கல்லூரி (சுண்டிக்குளி) மண்டபத்தில் நடைபெறும்.

பதிவுக் கட்டணம் ரூபா 100/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
செயலாளர்,
இறைமக்கள் பயிற்சி நிலையம்,
22, சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குளி.

(24073)

## யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

யாழ்ப்பாணக் கல்லூரியின் விஞ்ஞானபீட விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

### பேராதனைப் பல்கலைக்கழகம்

First in Science (G. S Q.) விஞ்ஞானமாணித் தகுதிகாண் பாடநெறிக்கான விரிவுரைகள் வெகு விரைவில் ஆரம்பமாகின்றன.

பாடநெறிகள்,

★ **GROUP - I**

- Applied Mathematics — (பிரயோக கணிதம்)
- Pure Mathematics — (தூய கணிதம்)
- Geography — (புவியியல்)

★ **GROUP - II**

- Applied Mathematics — (பிரயோக கணிதம்)
- Pure Mathematics — (தூய கணிதம்)
- Statistics — (புள்ளி விவரவியல்)

o மேலதிக விவரங்களுக்கு பின்வரும் முகவரியில் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

o பதிவாளரைச் சந்திக்கும் நேரம் பிரதி சனிக்கிழமைகள் தோறும் மு. ப. 9-00 மணிமுதல் 2-00 மணி வரை.

பதிவாளர்,
183, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-4148)

## 30 - 01 - 1993 இல் நடைபெறவுள்ள
## எழுதுவினைஞர் போட்டிப்
பரீட்சைக்கான
## துரித பயிற்சி வகுப்புகள்
### தொடர்ந்து 10 நாட்கள்

- ✶ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் பி.ப. 2 — 5 வரை
- ✶ நாளாந்தக் கட்டணம் ரூபா 30 மட்டுமே
- ✶ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.

**ஆரம்பம்: 18 - 01 - 1993 2 p.m.**

போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற அரிய சந்தர்ப்பம் - தவறவிடாதீர்கள்

# ASTAN INSTITUTE,

101/10, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-4178)

## கொழும்பு செய்தியாளர்

கொழும்பு, ஜன. 16 அகில இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளராக இருந்தவர் [illegible] நீக்கப்பட்டார்.

ஏற்கனவே கொழும்புச் செய்தியாளராக கடமையாற்றிய திரு. கருப்பசாமி ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டார் என்பது தெரிந்ததே. சபாநாயகர் முஹம்மது பதவி விலகி விட்டார் என்று தவறான தகவலை வெளியிட்டதற்காகவே அவர் வெளியேற்றப்பட்டார். (உ-எ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் மார்க்கண்டு தர்மலிங்கம்
[[illegible] ஸ்டோர்ஸ் உரிமையாளர்]

அமரர் மார்க்கண்டு தர்மலிங்கம் அவர்களின் மறைவினால் துயரமுற்றிருக்கும் மனைவி, மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்களின் துயரத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்

- ஜுப்பிற்றர் விளையாட்டுக்கழகம்.

7ஆம் கட்டை,
சங்கானை.

(21078)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்
நடத்தும்
## 2ஆவது வதிவிட
# வேளாண்மைப் போட்டி - 1992/1993
### யாழ். மாவட்டம்

1. தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்கு முறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது

இப்பணியில் செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தமிழீழ மக்கள் அனைவருக்குமே இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் தமக்கு தேவையான உணவை எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தாமே உற்பத்தி செய்யவேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டை அண்டிய பகுதியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட வேண்டும் எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/93 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள [illegible] பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வேண்டிக் கொள்கின்றது.

2. போட்டிக்கான நிபந்தனைகளும், புள்ளிகளும்

(01) வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச்செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல். (5 புள்ளி)

(02) 10' நீளம் 3' அகலமும் ஆன பாத்திகளில் மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், பயிற்றங்காய், கத்தரி, புடோல், பாகற்காய், பீர்க்கங்காய், சோயா, பீற்றூட், கரட், போஞ்சி, அவரை இனம் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகைப்பயிர் இனங்கள் இருத்தல் வேண்டும் (15 புள்ளி)

(03) 10' நீளமும் 3' அகலமுமான பாத்திகளில் இலைக்கறி பயிர்களான பொன்னாங்காணி, கீரை, பசளி, கங்குங்கிரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தவசி முருங்கை ஆகியவற்றில் ஒரு மரமாவது இருத்தல் வேண்டும். (5 புள்ளி)

(04) பழமரங்களான பப்பாசி, வாழை, மா, கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக வைக்கப்பட்டிருக்க வேண்டும் (8 புள்ளி)

(05) மஞ்சள், சீரகம், மல்லி, தூதுவளை முசுட்டை குறிஞ்சா, கற்பூரவள்ளி, கறிவேப்பிலை தும்பை, இஞ்சி போன்றவற்றுள் குறைந்தது ஐந்து வகைகள் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும். (5 புள்ளி)

(06) பயனுள்ள மரங்களில் பனை இரண்டு, தென்னை இரண்டு, கமுகு இரண்டு இப்பில் இப்பில் 10 ஆகியவற்றுள் இரண்டு இனங்கள் 01-11-92 இன் பின் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும். (5 புள்ளி)

(07) கூட்டெருத் தயாரித்தல் (7 புள்ளி)

(08) தேனீ வளர்த்தல் (7 புள்ளி)

(09) கோழிவளர்த்தல் (7 புள்ளி)
[கோழி 10 1½ 5 கூடமைப்பு - 2]

(10) தாரா குறைந்தது ஒரு சோடி வளர்த்தல் (4 புள்ளி)

(11) நல்லினப் பசுமாடு குறைந்தது [1] ஒன்று வளர்த்தல் [7 புள்ளி]
[பசு-1 5 5 பராமரிப்பு 2]

(12) நல்லின ஆடு குறைந்தது [1 ஒன்று வளர்த்தல் (7 புள்ளி)
[ஆடு 1 3 பராமரிப்பு - ]

(13) முயல் குறைந்தது ஒரு சோடி வளர்த்தல் (4 புள்ளி)

(14) விலங்கு தீனியான புல்லினம், இப்பில் இப்பில், முள்முருங்கை, சீமைக்கிளுவை என்பன இருத்தல் (15 புள்ளி)

குறிப்பு: விண்ணப்பங்கள் யாவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின். யாழ் மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகம், வட்ட இணைப்பாளர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு நேரடியாகவோ, கடிதமூலமாகவோ 30-01-1993 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடிய முறையில் அனுப்பி வைக்கவும் விண்ணப்பப்படிவங்களை கழக மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகம், வட்ட இணைப்பாளர் அலுவலகங்களில் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றது

[சி-4144]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக் கதவுகள், பூட்டு, பிணைச்சல்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சந்திரன், அளவெட்டி தெற்கு, 3ஆம் கிளை சங்கக்கடைக்கருகாமையில். (5485)

### தேவை

வைத்தியசாலைக்கு உதவியாளராக கடமையாற்றுவதற்கு ஒரு பெண் தேவை. வயது 30-40 வரையும் முடிவு திகதி 31-01-93. T. ஜெயரத்தினசிங்கம். மெடிக்கல் கிளினிக், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (புகையிரதக் கடவைக்கு அருகாமையில்) (5487)

கெக்கரி விதைகளை உற்பத்தி செய்து தரக்கூடியவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்க. நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். S. C. இம்மானுவேல், பொறியியலாளர் புள்பவிலா, சங்கானை றோட், அச்சுவேலி (21076

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (5727)

### இலவச திருமண சேவை

32 வயது, திருவாதிரை, கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்கள் சேவை ஞாயிறு காலையில். து.விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24041)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து சனி, ஞாயிறு கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24074)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணப்பெண்கள், ஆண்கள் எல்லா உத்தியோகங்களிலும் இருக்கிறார்கள். சந்திப்பு: ஞாயிறு காலை. மங்கள ஏஜென்சி. கொய்யாத் தோட்டம். ( 4079)

### 93 பலாபலன்கள்

06-01-93இல் ராகு - கேது மாற்றம். புத்தாண்டுப் பொதுப்பலா பலன்கள் 12 ராசிகளுக்கும் எழுதப்பட்டது. எழுதியவர்: சண் - மாஸ்ரர் விலை ரூபா 10/-. யாழ் நகர் எங்கும் புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (21052)

### தவறிவிட்டது

சி. மதியழகன் ஆகிய நான் இணுவிலூடாக கோண்டாவிலுக்குச் செல்லும் போது இல 392710299V, 536980229V உடைய அடையாள அட்டைகள் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் க. சிவசூரியமூர்த்தி, இணுவில் தெற்கு, இணுவில் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (5483)

## எய்ட்ஸால் 21 பேர் பலி

கொழும்பு, ஜன. 16-

கடந்த ஆண்டில் இலங்கையில் 21பேர் எய்ட்ஸ் நோயால் உயிரிழந்தனர் என்றும் — 77 பேருக்கு எச். ஐ. வி. வைரஸ் பீடித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**பிரிவு - II ஆண்டு 6,7,8,9,10**

ஆரம்பமாகிவிட்டன.

- ★ பிரிவு II இல் இன்னும் குறிப்பிட்ட அனுமதிகளே வழங்கப்படும்
- ★ கணிதம், விஞ்ஞானப் பாடங்கள் வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்.
- ★ மாதாந்தம் பரீட்சை நடத்தப்படும்.

(சி-11 5)


### முன்னறிவித்தல்

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

14 — 02 — 1993

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள், பிரேரணைகள் சமர்ப்பிக்க இருந்தால் அவற்றை அவர்கள் எழுத்து மூலம் கௌரவ செயலாளருக்கு 05 - 02 - 1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு சங்க உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பொ. சந்திரநாதன்,
கௌரவ செயலாளர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்
கொக்குவில். (24047)


## புனித செபஸ்தியார் திருவிழா

இம்முறை புனிதரின் திருவிழா சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடத்துவதற்கு இவ் ஆலய பங்குத் தந்தையும், பங்கு மக்களும் பலாலியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுடன் முன்வந்திருக்கின்றார்கள். இவ்விழா 17-01-1993 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனையுடன் 3 நாட்கள் திருநாள் ஆராதனைகள் நடைபெறும் 20-ஆம் திகதி புதன்கிழமை காலை 6-30 மணிக்கு திருவிழாப் பாடல் பூசையும் நடைபெறும்.

தகவல்:
பங்குத்தந்தை,
அருட்திரு. லூயிஸ்மொண்பேட்.

(24077)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ஞானப்பிரகாசம் றெக்ஸ்

(மெக்கானிக் நாகம்)

பிறப்பு: 06-01-1952 இறப்பு: 18-12-1992

வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தோம் - ஆனால்
இலவு காத்த கிளிபோல் ஆகிவிட்டதையா உன்கதை
வேலைக்குச் சென்ற நீ வருவாய் - எனக்
காத்திருந்த உன் மனைவி
உயிரற்ற உன் உடலைக் கண்டாள்.

பிரிவால் துயருறும்;
தாய், மனைவி,
பிள்ளைகள், நண்பர்கள்

58, புதிய வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம் (24073)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 04 — 1917



மறைவு: 16 — 01 — 1992

அமரர்

### அப்பாப்பிள்ளை சுந்தரம்பிள்ளை


"அன்பின் தெய்வமே! நாம் வாழ எம்மை வழிகாட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளி தந்து, எமை வாழ வைத்த குடும்பத்தின் குலவிளக்கே! எங்கள் ஐயாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்."

பாசமுள்ள:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருமதி ம. சுந்தரம்பிள்ளை,
"இந்திராலயம்",
முள்ளியவளை ... (24067)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 07 — 1952



மறைவு: 27 — 01 — 1992

### அமரர் சிவரத்தினம் அருட்சோதி

எங்கள் குலவிளக்கும் ஞாயிறென நாம் இருந்தோம்
மங்காப் புகழுடன் நீ பாதி வழிபோனபின்னே
தங்காமல் போய்விட்ட சுதிதன்னைக் கேட்டு
பொங்கும் துயரம்தான் தீரவில்லை எமக்கின்னும்!!

ஆறாத்துயருறும்;
- குடும்பத்தினர்.

[24053]

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்துரை தங்கராசா

(ஓய்வுபெற்ற இ. போ. ச. நடத்துனர்)

தோற்றம்: 07-03-1940 மறைவு: 28-01-1992

திதி: 16-01-1993

அன்புத் தெய்வமே! ஆண்டொன்று சென்றது நீங்கள் பிரிந்து. ஆனாலும் எமது உள்ளம் ஆறிடுமோ! நாம் துடியாய்த் துடிக்கின்றோம். அன்பின் சிகரமே! உங்கள் அன்புமுகம் காண எண்ணி விழிகள் தினமும் கண்ணீரைச் சிந்துகின்றதே! தங்களைப் பாசத்தோடு அழைக்க எமது உதடுகள் துடிக்கின்றதே! வள்ளலே! உமைப் பிரிந்து வாடுது எமது உள்ளம். சற்று ஆறுதல் கூறிட மாட்டீரோ!

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் கலங்கும்;
அன்பு மனைவி பெறாமக்கள், மருமக்கள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

"தவபதி",
3ஆம் கட்டை,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். (24003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உண்மை உருவம்

மூன்று படைகளின் தளபதிகளும் வாரத்தில் மூன்று தடவைகள் போர்முனைகளுக்கு விஜயம் செய்யவேண்டும் என்று பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார். தமது நாளாந்த வழமையான கடமைகளுக்குப் புறம்பாக இந்த விஜயங்களை தளபதிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அரசாங்கப் படைகள் இராணுவ ரீதியாகப் பெரும் தோல்வி அடைந்தன அதிக இழப்புகளைச் சந்தித்தன. டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன, லொன்சி பெர்னாண்டோ உட்படப் பல உயர் அதிகாரிகளை இழந்தன. அது மட்டுமன்றி உயிருக்கு அஞ்சிப் பல சிப்பாய்கள் படையை விட்டு ஓட்டம் பிடித்துவிட்டனர். இவ்வாறு படையை விட்டு விலகியவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தை எட்டிவிட்டதாகக் கூறப்படுகிறது.

உயர் தளபதிகளின் மரணங்களும், அடுத்தடுத்து வந்த தோல்விகளும் படைச் சிப்பாய்களின் மனதில் ஒரு விரக்தி நிலையை உண்டாக்கிவிட்டது. வெல்லக்கூடிய போர் என்று தளபதிகளும் படை மேலிடங்களும் போட்ட கணக்கு, தமக்குக் கூறிய கணக்குச் சரிதானா என்ற சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது.

யதார்த்தமாகப் பார்ப்பதானால், நடைமுறையில் இது வெல்லமுடியாத யுத்தம் என்று சிப்பாய்கள் உணர்ந்துகொண்டார்கள். அத்தகைய ஒரு யுத்தத்தில் தாம் ஏன் சம்பளத்துக்காகத் தமது உயிரைப் பலியிடவேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. அதனால் சொல்லாமல் கொள்ளாமல் ஆயிரக்கணக்கில் படையை விட்டு ஓடிவிட்டனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலை, இராணுவ வெற்றிமூலம் தமிழர்களை ஒடுக்கிவிடலாம் என்று திட்டமிட்ட, நினைத்த அரசுக்குப் பெரும் சங்கடத்தை உருவாக்கி விட்டது. இராணுவத் தோல்வி கண்டதால் அரசியல் தீர்வை நாடுவது அவமானம் என்று அது எண்ணுகிறது. அதனால் படையினருக்கு உற்சாகமும், ஊக்குவிப்பும் கொடுத்து அவர்களின் மனதை வெல்ல வேண்டிய தேவை அரசாங்கத் தலைவர்களுக்கு தோன்றியுள்ளது.

அதனாலேயே இனிமேலும் இராணுவத்தை விட்டுச் சிங்கள இளைஞர்கள் ஓடாதபடி பல தடுப்பு நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. அத்தகைய தடுப்பு முயற்சிகளில் ஒன்றே பிரதமர் விடுத்திருக்கும் உத்தரவு.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தை அனுராதபுரத்துக்கு மாற்றினாலும் சரி, நவீன ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்தாலும் சரி, போர் முனையில் துணிச்சலுடன் நின்று போராடுவதற்குச் சிப்பாய்கள் இல்லாமல் என்ன செய்வது? அதனைத் தக்கபடி உணர்ந்து கொண்டே, சிப்பாய்கள் படையை விட்டு விலகுவதை தடுக்க அரசுத் தலைவர்கள் படாதபாடு படுகிறார்கள்

படைத் தளபதிகளும், தாமும் அடிக்கடி படை முகாம்களுக்கு விஜயம் செய்து படையினரை சந்திப்பதன் மூலம், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதன்மூலம்,சிப்பாய்களின் மனதை மாற்றிப் போரை மீண்டும் உக்கிரமாக்க முஸ்தீபு செய்கிறார்கள்.

உண்மையாகவே அரசியல் தீர்வில் நாட்டமோ அல்லது நம்பிக்கையோ உள்ள எந்த அரசும் போரை உக்கிரமாக்க முனையாது. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வை நாடும் என்று நம்பி இருக்கும் உள்நாட்டவர்களும், வெளிநாட்டவர்களும் இப்போதாவது அதன் உண்மை உருவத்தைக் காணட்டும்.

# இனப்பிரச்சினை தீர்வுக்கு ஐ.நா. தலையிடும் ஒரு வழி

## "சண்டே ரைம்ஸ்" ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தைப் பெறுவதும் – அவசியமானால் ஐ. நாவின் தலையீட்டைப் பெறுவதும் ஒருவழியாகும்.

சண்டே ரைம்ஸ் வார இதழ் கடந்த வாரம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் முன் கண்டவாறு தெரிவித்துள்ளது.

"ஐ. நாவின் பங்கு?" என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

அரசியல் ரீதியில் முன்னுக்குச் செல்ல முடியாத முட்டுக்கட்டை நிலையில் நாம் உள்ளோம். ஐ தே க. — சுதந்திரக் கட்சி கருத்துடன்பாடு பற்றிய அதீத நம்பிக்கையின் மத்தியிலும், இராணுவ ரீதியில் நிச்சயமற்ற தன்மையும் முரணான சைகைகளுமே தெரிகின்றன.

உண்மையில் எதற்காகச் சண்டையிடுகின்றோம் என்று தெரியாத நிலையில் படையினர் உள்ளனர். இதற்கு முரணாக தாங்கள் எதற்காக போராடுகின்றோம் என்பது விடுதலைப் புலிகளுக்கு தெரிகின்றது; அதற்காக அவர்கள் உறுதியுடன் உள்ளனர்

பொருளாதார வளர்ச்சிக்கும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் அமைதித் தீர்வு துணிச்சலுடன் தேவைப்படுகின்றது. இச் சேற்றில் இருந்து எம்மை மீட்பதற்கு உலகத்தை நாம நாடவேண்டும். பொய்யான பெருமை அல்லது தப்பெண்ணம் உலக உதவியை நாடுவதை தடுக்கக் கூடாது

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவது என்பதும் அவர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது என்பதும் அரசு இராணுவத்தால் செய்ய முடியாதகாரியம் என்று தெரிகின்றது.

1992 ஆண்டு, இராணுவ ரீதியில் யுத்தத்தில் வெற்றி பெற்றவர் எவரும் இல்லை என்பதை நிரூபித்து உள்ளது. அரசியல் தீர்வுகாணும் சந்தர்ப்பத்தையும் அரசு இழந்துவிட்டது.

இந்த நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஐ நாவின் உதவியைப் பெறுவது பற்றிய யோசனையை சமர்ப்பிக்கின்றோம்.

இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

(த–எ)

### றோட்டரக்ட் நூல் நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். மிட் – ரவுண் றோட்டரக்ட் கழகத்தின் முதலாவது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு கைதடி வயோதிபர் மடத்தில் நூல் நிலையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்த நூல் நிலையத்தில் 950 ஆம் ஆண்டுக்கும் 1970 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் வெளிவந்த "கல்கி" இதழ்கள் சுழற்சி முறையில் விநியோகிக்கும் சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

புதிய நூல் நிலைய அங்குரார்ப்பணம் இன்று நடைபெறவுள்ளது. (அ)

### ஆஸ்பத்திரி குழு கொழும்புக்கு பயணம்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் போதனா வைத்திய சாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்த உயர்மட்டக் குழுவினர் கொழும்பு சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் 'ரமனா' கப்பலில் காங்கேசன்துறை சென்ற இந்தக் குழுவினர் அங்கிருந்து விமான மூலம் கொழும்பு சென்றதாகவும்—

அங்கு சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் அவர்கள் பேச்சு நடத்துவார்கள் எனவும் தெரிய வந்தது.

(ஒ 3)

### கோரிக்கை

வலி.மேற்கு, ஜன. 13

யாழ். மாவட்டத்தில் 'உ' 'அ' அட்டைகள் வைத்திருக்கும் சகலருக்கும் மாதத்தில் ஒரு முறையாவது கட்டுப்பாட்டு விலையில் உலர் உணவுப் பொருள்கள் விநியோகிப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்களும். பொது நிறுவனங்களும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன

### தற்செயல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவமாக இருக்கலாம் என நான் கருதுகிறேன்

கேள்வி :- நீங்கள் கூறும் சமாதானத் திட்டம் குறித்துக் கூறுவீர்களா ?

திலகர்;- இந்த முயற்சி நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது. ஆனால் அதனை எப்படிச் செயற்படுத்துவது என்பதுதான் பிரச்சினையாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை யாழ்ப்பாணத்திலிருந்து ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு கூட்டி வருவது ஒரு வழி இல்லையேல் யாரேனும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று தலைமைப்பீடத்தைச் சந்தித்து, சமாதானத் திட்டத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டிய நிலை

அதனால் இறுதியாக திரு கிட்டு தானே யாழ்ப்பாணத்துக்குச் சென்று தலைமைப் பீடத்தைச் சந்திக்க முடிவு செய்தார். அதன்படி அவர் தமது பயணத்தை ஆரம்பித்தார்.

கேள்வி:- இந்த சமாதானத் திட்டத்தில் கொழும்பு அரசுக்கும் பங்கிருக்கின்றதா?

திலகர் :- கொழும்பு இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றதா என்பது குறித்து நான் கருத்துக் கூற முடியாது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையையே இந்த சமாதானத் திட்டம் அடிப்படையாகக் கொண்டது என்று மட்டும் நான் கூறமுடியும்.

கேள்வி:- நீங்கள் கூறும் ஐரோப்பியநாடு எது?சுவிஸா?

திலகர்:- சமாதானத் திட்டம் பற்றிய சகல ஏற்பாடுகளும் உத்தியோகப்பற்றற்ற முறையில் நடைபெற்றதால் நான் எந்த நாட்டையும் பெயரிட்டுக் குறிப்பிட விரும்பவில்லை. என்றாலும் அது ஐரோப்பிய கூட்டுநடவடிக்கை என்று மட்டும் நான் கூறலாம் பல சர்வதேச அமைப்புகளும் அதில் பங்குபற்றின – என்றார். (உ-3)

### இந்திய அறிக்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியுள்ளது ஆகவே திரு. கிட்டு வழிமறிக்கப்பட்டது தற்செயல் சம்பவமாக இருக்கலாம்.

"யார் கப்பலில் இருக்கிறார் என்பதையோ அல்லது அதில் இருப்பவர் சமாதான முயற்சிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார் என்பதையோ அறியாமல் கப்பலை கடற்படையினர் தடுத்து நிறுத்தியிருக்கக்கூடும்.

"ஆனால் இது தொடர்பான மேல் நடவடிக்கை எடுப்பதில் பாதுகாப்பு அமைச்சகச் செயற்பாடு மந்தமாக இருப்பதைப் பார்த்தால் வேறு விதமாக எண்ணத் தோன்றுகிறது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-3)

### ஆசிகுளம் தாக்குதலில் 6 பொலீஸார் பலியாகினர்!

கொழும்பு, ஜன. 16

வவுனியா ஆசிகுளம பகுதியில் ஸ்ரீலங்கா பொலீஸார் மீது கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 6 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

கூட்டுப்படைத் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது

வவுனியாவிற்கு வடகிழக்கே ஆசிகுளம் கிராமத்தில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீதே விடுதலைப் புலிகள் இத் திடீர்த் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

### 250 பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் மாவட்டபாடசாலைகளுக்கு நேற்று வரை 250 பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளதாக கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடந்த பயிற்சியில் கலந்து கொண்ட —யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த— ஐநூறுக்கு மேற்பட்ட பட்டதாரிகளில் நேற்று வரை சுமார் 250 பேருக்கு யாழ் மாவட்டத்தில் உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும்—

இனி நியமனம் பெறுவதற்காக வரும் பட்டதாரிகளுக்கு சாதாரண வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளிலேயே நியமனம் வழங்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### மாகாண சபைத் தேர்தல்: ஒஸி ஐ.தே.கவில் போட்டி!

கொழும்பு, ஜன. 16

மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஒஸி அபயகுணசேகர, நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் ஐ தே. க. பட்டியலில் போட்டியிடுவார் எனத் தெரியவருகிறது

ஒஸி தற்பொது ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் செயலாளர் ஆவார்.

இதேவேளை—

ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் என்றும்—

சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம். பி. கிங்ஸ்லி விக்கிரமரத்ன மேல் மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட விரும்பம் தெரிவித்துள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

பம்பாய்க்குச் சென்ற

### பிரதமர் ராவுக்கு எதிராக முஸ்லீம்கள் கூச்சல்!

இந்து – முஸ்லிம் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பம்பாய் நகருக்கு பிரதமர் நரசிம்மராவ் நேற்று விஜயம் செய்தபோது, அவருக்கு எதிராக முஸ்லிம்கள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகள் ஏற்றி நரசிம்மராவுக்கு அவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்

கடந்த 10 தினங்களாக பம்பாயில் நடந்த கலவரங்களில் சுமார் 670 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

இந்து – முஸ்லிம் ஒற்றுமையை பலப்படுத்தக் கோரி, ஜனதாதள் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு. வி. பி. சிங், பம்பாயில் நேற்று காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். (உ–எ)

### சீருடை விநியோகம் 18 ஆம் திகதி நடக்காது!

#### இனி எஞ்சிய துணி வந்த பின்பே!!

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கத் தேவையான சீருடைகள் போதியளவு வந்து சேராததால், திட்டமிட்டபடி எதிர்வரும் 18 ஆம் திகதி சீருடை விநியோகம் நடைபெறமாட்டாது.

யாழ். கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஓரிரு தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமாரி" கப்பலில் எஞ்சிய சீருடைத் துணிகள் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளதாகவும்—

அவை வந்து சேர்ந்த பின்னரே சீருடை விநியோகம் சம்பந்தமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 5 ஆம் திகதி முதல் மாணவர்கள் எந்த எந்தப் பாடசாலைகளில் இருக்கிறார்களோ அந்த அந்தப் பாடசாலை அதிபர்கள் அந்தமாணவர்களுக்குச் சீருடைகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவ தெரிவித்தார். (உ 3)

கிழக்கில் இராணுவ நடவடிக்கை:

### மட்டு.வந்தாறுமூலை காட்டில் படையினர் தீவிர தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன. 16

மட்டக்களப்பில் இருந்து வந்தாறுமூலை வரை புலிகளைத் தேடி அழிப்பதாகக் கூறி, ஸ்ரீலங்கா படையினர் இராணுவ நடவடிக்கை ஒன்றைக் கடந்த வியாழன் முதல் ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு – வந்தாறுமூலையில் உள்ள காடுகளில் தற்சமயம் படையினர் தீவிர தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர் என்றும்—

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவியாக விமானப்படையினரின் ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் திருகோணமலை மாவட்டத்திலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ நடவடிக்கையை படையினர் மேற்கொண்டதாக கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் நளின் அங்கம்மன தெரிவித்தார். (ஒ-எ-3)

### ஐரோப்பிய நாட்டில்....

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

யையும் இது சம்பந்தமாக அணுகி வருகிறோம்.

மேலும் இந்த சர்வதேச சமாதான முயற்சி தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தரும் என்ற ரீதியிலும் —

அதேவேளை, இந்தச் சர்வதேச முயற்சியில் இந்தியாவின் பங்கும் இருக்கின்றது. நிச்சயமாக இருக்கவேண்டும் என்ற ரீதியிலும் —

இந்திய அரசாங்கம் இந்தச் சமாதான முயற்சியை மேற்கொண்ட கிட்டுவுக்கோ அல்லது அவரது முயற்சிக்கோ எந்தத் தீங்கும் விளைவிக்காமல் அவர் தனது இலக்கை நோக்கி — தலைமைப்பீடத்துக்கு செல்லும் இலக்கை நோக்கி — செல்வதற்கு வசதியாக அவரை விடுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

கேள்வி;- சமாதான தூதுவராக சென்றிருக்கிறார் என்று குறிப்பிட்டது பற்றி ஏதாவது கூற முடியுமா?

பதில்:- நிச்சயமாக. பல்வேறு முயற்சிகள் அவர் ஐரோப்பாவில் இருந்த சமயம் மேற்கொள்ளப்பட்டன அவர் பல்வேறு தேசிய நிறுவனங்களைச் சந்தித்துள்ளார். அதேவேளை பல நாட்டு அரசாங்க பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார் அவ்வுரையாடல்களின் விளைவாக சமாதானத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி ஸ்ரீலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஐரோப்பிய நாடொன்றில் சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பது என்ற திட்டம் உருவானது.

அது குறித்து விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்துடன் மிக விரிவாக ஆழமாக ஆராய வேண்டிய தேர்ப்பந்தம் திரு. கிட்டுவுக்கு ஏற்பட்டது.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் — விடுதலைப் புலிகளின் தலைமைப் பீட பிரதிநிதிகள் வெளியிலே வர முடியாத நிலையில் — இங்கிருந்து. இங்கேயுள்ள சமாதான முயற்சி திட்டத்தை விரிவாக விளக்குவதற்காக அவர் புறப்பட்டுச் சென்றார்.

அந்த வேளையில் தான் ஒரு சமாதான தூதுவராக — சமாதான முயற்சியை முன்னெடுப்பவராக — சென்று கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் தான் இந்தத் துரதிஷ்டவசமான சம்பவம் நடைபெற்றுள்ளது.

கேள்வி:- திரு. கிட்டுவை கடற்படை தடுத்து அழைத்துச் சென்றுள்ளது என்று கூறலாமே தவிர கைது ஏதும் செய்யவில்லையே?

பதில்:- அழைத்துச் செல்லப்படுகிறார் என்று கூறமுடியும்.

— இவ்வாறு திரு திலகர் பி பி ஸி. தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் இராசரத்தினம்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் இராசரத்தினம் காலமாகி விட்டார். இவர் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், குணரத்தினம், பாலசுப்பிரமணியம், செல்வராணி சிவசுப்பிரமணியம், நந்தாவதி, சறோஜாதேவி பாலகிருஷ்ணன், சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற காணிக்கைராசா, தவப்பிரகாசம், ஒளாலி யசோதா, மாலினிதேவி ஆகியோரின் மாமனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை [17-1-93] ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல் :
இ. சிவசுப்பிரமணியம்

மட்டுவில் வடக்கு.
[24091]

## ஆறுமுகம் ஐயாத்துரை

தாவடி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் ஐயாத்துரை காலமாகிவிட்டார். அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், தம்பு, கனகரத்தினம் தங்கம்மா, கற்பகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயபாலசிங்கம், இரத்தினசிங்கம், பரமானந்தம், நாகலக்சுமி, மீனலோசனி, குணசிங்கம் (A. G. எலெக்றிக்கல்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்), திலகசிங்கம் (ஜேர்மனி), பாலசிங்கம் (இத்தாலி), சரோஜாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், இராசையா, சந்திரகிரிராஜா, தனவதி, ஈஸ்வரி, மதுராம்பிகை, வதா (ஜேர்மனி), சிவனருட்செல்வி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (16-1 93) சனிக்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
ஐ. குணசிங்கம்
(மகன்)

தாவடி வடக்கு
(24090)

## திருமதி அன்னம்மா முத்துத்தம்பி

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா முத்துத்தம்பி காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற் வின்சென்ற் இராஜதுரை (ஆசிரியர்), திருமதி றோஸ் பஸ்ரியாம்பிள்ளை, திருமதி செல்வமலர் யேம்ஸ் சந்திரசேகரா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் பாஷையூர் வயோதிப இல்லத்தில் இன்று (16-01-93) பி. ப. 3 மணிக்கு நடைபெறும், இவ்வறிவித்தலை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி செல்வமலர் யேம்ஸ் சந்திரசேகரா
(மகள்)

பாஷையூர்.
(24092)

## திருமதி நல்லையா கனகம்மா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், இல 30, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமாகிய திருமதி நல்லையா கனகம்மா 15-01-93 இல் காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் நல்லையாவின் அன்பு மனைவியும், தவராணி, குகராஜவதி (ஜேர்மனி), திலகவதி (சுவிஸ்), மங்களேஸ்வரி (ஆயுர்வேத வைத்தியசாலை கைதடி), நந்தகுமாரி (காசாளர் புங். நயி. ப. நோ கூ. ச.), சிவகாமி (ஜேர்மனி), பரமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நா. தர்மலிங்கம் (அதிபர், புங்குடுதீவு சித்திவிநாயகர் ம. வி.), பத்மநாதன் (ஜேர்மனி), சிவபாலன் (சுவிஸ்), பொன்னம்பலம் (கொழும்பு), குமரையா (சுவிஸ்) பாலசுப்பிரமணிம் (ஜேர்மனி), சத்தியராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வே. இ. சண்முகம் (லண்டன்), வே. இ பரமநாதன் (திருகோணமலை), வே. இ. பாக்கியநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபாகரன் (சுவிஸ்), சுகிர்தா, சுகந்தி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), சுவர்ணா (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), சந்திரிகா, ஜெயந்தி, கேதாரகௌரி, மகிந்தன், சுபாஜினி, சசிகலா, தவரூபி, தனுசா, குமணன், பவிதா, கவிதா, கயந்தினி, மயூரன், தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-01-993) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
நா. தர்மலிங்கம்
(அதிபர், புங்குடுதீவு சித்திவிநாயகர் ம. வி.)
(மருமகன்)

இல. 30, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(24085)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இந்து ஆலயங்கள் பற்றிய கருத்தரங்கு நாளை

ஆலய தர்மகர்த்தாக்கள், முகாமையாளர்கள், பரிபாலன சபையினர்களுக்கென யாழ்ப்பாணம் இந்துசமய பேரவையினர் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

''இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும்'' என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெறும்.

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையும், 'துர்க்கா துரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடக்கவுரையும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் எழுதிய ''இந்து பண்பாட்டு மரபுகள்'' என்னும் நூல்வெளியீடும் இடம்பெறவுள்ளது.

[க-117]

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 01 — 1927

மறைவு: 27 — 01 — 1992

## அமரர் வேலன் பிள்ளையார்

நெஞ்சில் ஓரிடி நேற்று விழுந்தது
நெஞ்சைப் பிசைந்தது நெருடி நின்றது
பந்த பாசங்கள் வந்து கூடவே
வெந்த புண்ணிலோர் வேல் நுழைந்தது
தந்தை ''வேலன் பிள்ளையார்'' போகவே
வந்த காலன் வாகனம் ஆகியே
இன்னொரு ஆண்டு ஓடியே போனது
இன்றுமோ எம்முயிர் உம்மையே தேடுது!

அன்பின் குடும்பத் தலைவனுக்காக:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்
(5730)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## திரு. மார்க்கண்டு தர்மலிங்கம்

[லீலா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்]

சிவபதமடைந்த நாளன்று எமது இல்லம் வந்து அன்பு காட்டி, ஆறுதலும், தேறுதலும் கூறிய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிகழும் ஆங்கீரச வருஷம் தை 3 ஆம் நாள் இன்று சனிக்கிழமை சங்கானை மாவடி வீதி, இல்லத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் குடும்ப சமேதரராகக் கலந்துகொண்டு அன்றைய வைபவத்தைச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்:
மனைவி,
த. சிவசுப்பிரமணியம்,
த. கோவிந்தசாமி. (லீலா)
(மருமக்கள்)

அராலி வீதி,
சங்கானை.
(24093)

# பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண புலிகள் தயாராக உள்ளனர்

## கொழும்பு திரும்பிய ஆயர் பேட்டி

கொழும்பு, ஜன. 16

பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் தயாராக இருக்கின்றார் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

கொழும்பு திரும்பிய அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ பி.பி.ஸி. நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

திரு. பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய போது அவரிடம் விரைவாகச் சிந்திக்கும் தன்மையையும், மிருதுவான பேச்சையும் என்னால் அவதானிக்க முடிந்தது. நிலைமையை அவர் நன்கு அறிந்திருந்தார். அவரது பதில்கள் முடிவாகவும், தெளிவாகவும் இருந்தன.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு பொலீஸார் விடுவிக்கப்பட்டமை நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாகும். இதன் அடிப்படையிலேயே திரு. பிரபாகரன் இப்பிரச்சினையைக் கையாண்டுள்ளார் என நான் நினைக்கின்றேன் என்றார். (த)

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், ஜன. 16

மாதகலில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுப்பகல் 11.10 மணியளவில் சுழிபுரம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

குடியிருப்புப் பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் பதற்றமுற்றனர். (ஒ-28)

சரசாலை — இலந்தைத்திடல்

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய திருப்பணி நிதிக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | — | 1157 |
| இரண்டாம் பரிசு | — | 0060 |
| மூன்றாம் பரிசு | — | 2841 |

ஆறுதல் பரிசில்கள் :
(1) 1836 (2) 0818 (3) 2122
(4) 0081 (5) 2340

✶ பரிசில்களை 15-02-93க்கு முன்பு பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

✶ ஆதரவளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

'' இறை பணியே இன்பப்பணி ''

ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தொண்டர் சபை
சரசாலை – சாவகச்சேரி.
(24021)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பல்வளநாயகி சோமசுந்தரக்குருக்கள்

வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவில் பிரதம குருவான காலஞ்சென்ற சோமசுந்தரக்குருக்களின் மனைவி பல்வளநாயகி 15-01-93 நேற்றுக் காலமானார். அன்னார் கோவிந்தராஜா, மகாராஜா, நந்தகோபால், பராசக்தி, பொன்னம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிரமலை, காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, பருவதாம்பாள், அன்னலட்சுமி, நாகபூஷணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 16 01-93 நண்பகல் 12 மணியளவில் 141, பருத்தித்துறை வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஸ்ரீஸ்கந்தராஜா
(பேரன்)

141, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(24094)

## நல்லம்மா நடராஜா

உடுவிக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லம்மா நடராஜா 15-1-93 நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இசைவள்ளல் அழகையா நடராஜா (சங்கீத ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை (சங்கீத ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மாமியாரும், சுருதிலயனின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 16-1-93 இல் பழவத்தை, வல்வெட்டி, வல்வெட்டித்துறையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 மணியளவில் எள்ளங்குளம் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. சிதம்பரப்பிள்ளை
(மருமகன்)

பழவத்தை,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
(24095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org